# மெய்யான விடுதலையின் சிறந்த வார்த்தை




## 2.7 இந்தப் பரிபூரண வாழ்வு

**வேத வசனம்:** **அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.**

*யோவான் 1:12*

**அறிக்கை:** **தேவன் வந்ததால் நமக்கு நிறை வாழ்வு உண்டு**



**சத்தியம்:** திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவும் வந்தேன் என்று இயேசு சொல்கிறார்.

### வேத பகுதி: ஆதியாகமம் 15: 1-6

**பாடம்**

**1. தேவன் ஆசீர்வதிக்கிற வாழ்க்கை:** ஆபிரகாம் தேவனை முழுவதும் விசுவாசித்ததன் விளைவாக அவர் அதிகம் ஆசீர்வதிக்கப்பட்டார். வாழ்வதற்கு ஒரு நோக்கம், தேவனுடைய வழிகாட்டுதல், செழிப்பு, மகிழ்ச்சி இவை யாவும் அவர் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள். அவரைப்போலவே உங்களுக்கும் நிறைவான வாழ்வு ஒன்றை கர்த்தர் ஏற்படுத்திவைத்திருக்கிறார் என்பதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். தேவன் பெருந்தன்மை உடையவர். அவர் சொல்லுகிறார் "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்". (எபிரெயர் 11:8-12)

**2. பிசாசு ஒரு திருடன்:** ஒரு நூறு ரூபாய் தாளைக் காட்டுங்கள். நல்ல நோட்டுக்கும் போலியான நோட்டுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குங்கள். அதுபோலவே பிசாசு "போலியானப் பொருட்களைக்" காட்டி நம்மை ஏமாற்றவும் அழிக்கவும் செய்வான். "திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்". உன்னை ஏமாற்றக்கூடிய போலியானப் பொருட்கள் என்னவென்று கேட்டு அவைகளைப் பட்டியலிட்டு விவாதியுங்கள். (யோவான் 10:10)

**3. மெய் மற்றும் போலி திருப்தி:** உலகில் உள்ளப் பொருட்கள் போலிகளாகவும் நிரந்தரமற்ற மகிழ்ச்சியையும் தருகின்றன. தேவனால் மட்டுமே மெய்யான மகிழ்ச்சியையும் திருப்தியையும் கொடுக்க முடியும். தேவன் தரும் மெய்யான மகிழ்ச்சி நம்மிடம் இல்லை எனில் நாம் நம் ஆத்துமாவை அழிக்கும் பிசாசின் சோதனைகளில் எளிதாகச் சிக்கிக்கொண்டு உலகப் பொருட்களுக்கு அடிமையாகி விடுவோம். (யோவான் 16:22)

**4. தூய ஆவியால் நடத்தப்படுதல்:** வங்கியில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் நல்ல பணத்தையும் கள்ளப் பணத்தையும் பகுத்தறிய கற்றுத்தந்திருப்பார்கள். அதுபோலவே நாமும் தேவனிடமிருந்து வருகிறவைகளுக்கும் ஆவிக்குரிய எதிரியிடமிருந்து வருகிறதற்கும் உள்ள வேறுபாட்டை அறிந்திருக்கவேண்டும். நம்மை வழிநடத்துவதற்காகவே தேவ ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார். "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்". (ரோமர் 8:14-16)

சிங்கப்பூரில் நடந்த உண்மையான சம்பவம்: ஒரு தகப்பன் சூதாட்டத்துக்கு அடிமையானதால் அதிக கடனில் தள்ளப்பட்டார். அதைத்தொடர்ந்து அவர் தன் மனைவி பிள்ளைகளைக் கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்துகொண்டார். அவர் திருச்சபைக்குச் சென்றவர். இதிலிருந்து திருச்சபைக்கு செல்லுகிறவர்களும் ஏமாற்றப்படுவார்கள் என்பதை நாம் அறியலாம். பிசாசுகள் போலிகளை அவருக்குக் காட்டி அவரையும் அவருடைய குடும்பத்தையும் அழித்தன. இது மிகத் துயரமான சம்பவம் என்பதை ஏற்றுக்கொள்ளுவாயா?

**முடிவுரை:** மனிதருடைய அனைத்து மகிழ்ச்சியையும் எடுத்துவிடவேண்டும் என்பது தேவனுடைய நோக்கமல்ல. மாற்றாக மனிதர்கள் நிறைவான மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்பதே அவருடைய சித்தம். பிசாசு என்ற நம்முடைய எதிரி நம் வாழ்வைத் திருடி அழிக்க விரும்புகிறான். ஆகையால் நம் தேவன் ஆசீர்வாதங்களின் தேவன் என்பதை உறுதியாக விசுவாசிக்க வேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.